தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 9-7-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**விவசாயிகள் பருத்தி விதைக்கலாம்**

அமெரிக்க ஐக்கிய நாடுகள் வேளாண்துறை (USDA)-யின் படி 2015-16 ஆம் ஆண்டில், உலகளவில் பருத்தி உற்பத்தியில் இந்தியா முதலிடம் வகிக்கின்றது. 11.9 மில்லியன் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 28 மில்லியன் பொதிகள் (1 பொதி-170 கிலோ) உற்பத்தி செய்து உலக பருத்தி உற்பத்தியில் 27.45 சதவிகிதம் பங்களிக்கின்றது. சீனா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், பாகிஸ்தான் மற்றும் பிரேசில் ஆகியவை பருத்தி உற்பத்தி செய்யும் மற்ற முக்கிய நாடுகளாகும். வேளாண் அமைச்சகத்தின் முதல் முன்கூட்டிய மதிப்பீட்டின் படி, இந்தியாவில் பருத்தி உற்பத்தியில் குஜராத் முதலிடம் வகிக்கின்றது. இதனைத் தொடந்து மகாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேசம், ஹரியானா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் பருத்தி உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றது. 2014-15 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் பருத்தி 0.12 மில்லியன் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 0.53 மில்லியன் பொதிகள் உற்பத்தி செய்யப்பட்டது. பெரம்பலூர், சேலம், திருச்சி, தருமபுரி, அரியலூர் மற்றும் கடலூர் பருத்தி உற்பத்திசெய்யும் முக்கிய மாவட்டங்களாகும். பருத்தி ஆலோசனை சங்கத்தின் படி, இந்தியாவில் பருத்தியின் தற்போதைய இருப்பு 35 இலட்சம் பொதிகளாகும்.

இந்திய பருத்தி சங்கத்தின் படி, 2015-16 ஆம் ஆண்டு, இந்தியா 6.5 மில்லியன் பருத்தி பொதிகளை ஏற்றுமதி செய்துள்ளது. வறட்சியின் காரணமாக வரத்து குறைந்ததால் உள்நாட்டில் பருத்தியின் விலை ஏறத் தொடங்கியது. ஆதலால், பருத்தி ஏற்றுமதி வெகுவாக குறைந்த காரணத்தால் முக்கிய பருத்தி இறக்குமதியாளர்களான பாகிஸ்தான், வங்காளதேசம் மற்றும் வியட்நாம் மற்ற நாடுகளிடமிருந்து இறக்குமதி

செய்யத் தொடங்கிவிட்டன. இந்தியாவும் 1.2 மில்லியன் பருத்தி பொதிகளை இறக்குமதி செய்துள்ளது. அடுத்த பருவத்தில் வரும் பருத்தியின் அறுவடைக்கு முன்பு 4 இலட்சம் பொதிகள் இறக்குமதி செய்யப்படலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக மூலங்கள் மற்றும் இந்திய பருத்தி கூட்டமைப்பின் படி, விவசாயிகள் மாற்றுப் பயிர்களான நிலக்கடலை, பருப்பு, நெல் மற்றும் கரும்புக்கு மாறியதால் இந்தியாவில் பருத்தியின் பரப்பளவு 35 சதவிகிதம் வரை குறையும் எனக் கூறியுள்ளது. சென்ற பருவத்தை விட இப்பருவத்தில் உற்பத்தி 7.3 சதவிகிதம் குறைய வாய்ப்புள்ளது. பருத்தி விளைவிக்கும் முக்கிய மாநிலங்களில் கடந்த பருவத்தில் வெள்ளை ஈ தாக்கியதாலும், இந்த ஆண்டில் பருவமழை சராசரியை விட அதிகமாக இருக்கும் என கணிக்கப்பட்டதால் விவசாயிகள் மாற்றுப் பயிர்களுக்கு சென்றனர்.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 10 ஆண்டுகளாக கொங்கணாபுரம் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் நிலவிய பருத்தியின் விலையை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில், ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கிவரும் விலை முன்னறிவிப்பு திட்டம், சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் தரமான நீண்ட இழை கொண்ட பருத்தியின் விலை 2016 டிசம்பர் - 2017 ஜனவரி மாதங்களில் குவின்டாலுக்கு ரூ.6,000-6,200 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் விவசாயிகள் தங்கள் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி- 0422-2431405

**<u>தொழில்நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்
பருத்திதுறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசிஎண் - 0422-2456297

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்